நான் இந்த அவையிலே குறிப்பிட்டுச் சுட்டிக் காட்டியிருக்கிறேன். அது அவைக்குறிப்பிலும் ஏறியிருக்கிறது. ஆகையினால், மாநில அரசினுடைய மெத்தனமான போக்கினால்தான் தமிழக மக்களுக்குக் கிடைக்கவேண்டிய இத்திட்டம் வராமல் போய்விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்?

பதில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியோடு வினா விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மதுரை நகரில் குடி தண்ணீர்த் தட்டுப்பாடு.

*வினா எண். 410—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை நகரின் குடி தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மதுரை மாநகரின் குடிநீர் பற்றாக்குறையைப் போக்க ரூ. 302'26 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தி திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதி வழங்கி இத் திட்டம் செயலாக்கத்திலுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 302 லட்சம் ரூபாய் செலவிலே மதுரையிலே குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளிலே மதுரை புறநகர்ப்பகுதிகளிலும், சுற்றி இருக்கக் கூடிய பகுதிகளிலும் உள்ள மக்களுக்கு தண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடும் அதிலே இருக்கிறதா? அப்படியானால் அதன் விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மதுரை மாநகருக்கு மட்டும் பொருந்தும், இத்திட்டத்திற்கு திருப்புவனம், மணலூர், மேலக்கால் ஆகிய மூன்று இடங்களிலும், வைகை ஆற்றிலிருந்து நீர் சேகரிக்கப்பட கிணறுகள் நிறுவப்பெற்று, அவற்றின் மூலம் தினசரி 30 லட்சம் காலன் சேகரிக்கப்பட்டு, ஜான்சி ராணி பூங்கா மகால், பூங்கா, மற்றும் மாநகராட்சி டி.பி. காம்பவுண்ட் ஆகிய இடங்களில் அமைக்கப்படவிருக்கும் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகளுக்கு நீர் ஏற்றப்பட்டு, படிமான குழாய்கள் மூலமாக நகருக்குக் குடி தண்ணீர் வினியோகம் செய்யப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரைப் பகுதியிலே ஒரு ஆண்டுக்கு முன்பு கடுமையான குடி தணணீர் பற்றாக்குறை ஏற்பட்டு அரசு தடுப்பு நடவடிக்கை எடுத்தது. இந்த ஆண்டாவது மதுரை மாநகருக்கு போதுமான தணணீர் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்னும் அதிகமான அளவுக்கு அவர்களுக்கு தணணீர் கொடுக்க வேறு ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது போல மேலும் மதுரை மாநகரத்தில் குடிதண்ணீர் பிரச்சினை வரக்கூடாது என்பதற்காக, நீண்டகாலத் திட்ட அளவுக்கு மேற்கே பாயும் கள்ளாறு நதியைத் தடுத்து அதனின்று கிடைக்கும் நீர் மதுரைக்கு பயன்படும் வகையில் ஒரு குறிப்புத் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது. அண்மையில் திருவனந்த புரத்தில் நடந்த தென் மண்டல குழுக் கூட்டத்தில் விவாதிக் கப்பெறவிருக்கும் நிகழ்ச்சி நிரலில் இப்பொருள் விவாதிப்பதற் காக சேர்க்கப்பட்டது. அக்கூட்டத்தின் நடவடிக்கைகள் எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில், ஆற்றுக்கு வட பக்கத்திலே உள்ள அத்தனை மதுரை வாழ் மக்களுக்கும் சரியாகக்குடிதண்ணீர் கிடைப்பதில்லை. அதைப் போக்குவதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா? அதைப் போலவே உலகத் தமிழ் மாநாட்டின்போது ஏற்படுத்திய குளியல் அறைகளுக்குத் தண்ணீர் சப்ளை செய்ததன் மூலமாகக் குடிதண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக ஏற்பட்டிருப்ப தாகச் சொல்லப்படுகிறது. இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நடைமுறைப்படுத்த இருக்கிற திட்டம் 302'26 இலட்சம் மதிப்பீட்டில் மதுரை மாநகரின் குடிநீர் பற்றாக் குறையைப் போக்குவதற்காக போடப் பட்டதுதான், அடுத்து குளியல் அறைக்குத் தண்ணீர் கொடுத்த தன் மூலமாக பாதிப்பு ஏற்பட்டதாகச் சொல்கிறார்கள். அது பற்றித் தகவல் சேகரித்து, இந்த அரசு ஆவன செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, மதுரை மாநகர் எல்லைக்குள்ளே இருக்கக் கூடிய சுமார் 10க்கும் மேற்பட்ட கண்மாய்கள் இன்றைக்கு மேடிடப்பட்டு, அவைகள் எல்லாம் வீடுகளாக ஆக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் கண்மாய்களிலிருந்து பாசன வசதி பெற்று வந்த நூற்றுக்கணக் கான ஏக்கர் நிலங்களும் குடியிருப்புகளாக மாற்றப்பட் டுள்ளன. ஆகவே, அந்த 10 கண்மாய்களுக்கும் ஏற்கெனவே வைகை அணையிலிருந்து வழங்கப்பட்டு வந்த நீரை மதுரை நகருக்கு குடிதண்ணீர் சப்ளை செய்வதற்காக வழங்க அரசு உத்தரவு இடுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே அப்படி ஒரு உத்தேசம் இல்லை.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 மார்ச் 6]

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரத்தில் குடிதண்ணீர் அபிவிருத்தித் திட்டம் பற்றி அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். ஆனால் இப்பொழுது மதுரை நகரத்திலே கடுமையான குடி தண்ணீர் தட்டுப்பாடு நிலவுகிறது. மின்சார வெட்டின் காரணமாக இது மேலும் கடுமையாக உள்ளது. மதுரை நகராட்சி சபையே நீரேற்றுக் கிணறுகளுக்கு ஜெனரேட்டர் பொருத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தக் கிணறுகளுக்கு ஜெனரேட்டர்களைப் பொருத்தி தற்போது இருக்கக் கூடிய தண்ணீர் பஞ்சத்தைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி செய்த ஏற்பாட்டின் மூலமாக அவ்வளவு தட்டுப்பாடு இருக்காது என்று அரசு கருதுகிறது. என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின் மீது மதுரை மாநகராட்சி மேயர் அவர்களைக் கேட்டு, ஆவன செய்ய அரசு முயற்சி எடுக்கும்.

கூவம் நதியின் துர் நாற்றத்தைப் போக்கும் திட்டம்.

*வினா எண் 411—திருவாளர்கள் ரா. கிருஷ்ணன், சீ. சிவப் பிரகாசம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் கூவம் துர்நாற்றத்தைப் போக்க அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சென்னை நகரின் கழிவு நீர் கூவம் நதியில் கலந்து அதை அசுத்தப்படுத்துவதை கட்டுப் படுத்தவும் தடுக்கவும் அரசு ஆணைப்படி சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியம் நகரின் பல்வேறு பகுதி களிலிருந்து கூவம் ஆற்றில் கலக்கும் கழிவு நீர் நிலை பற்றி விவர மாக ஓர் ஆய்வு நடத்திஅதனைத் தடுத்து கட்டுப்படுத்துவதற்கான வழி முறைகளை ஆராய்ந்து அதன்படி கீழ்க்கண்ட செயற் பணி கள் திட்டமிடப்பட்டு படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகின் றன.

(1) கூவம் ஆற்றில் கலக்கும் கழிவு நீர் நிலைகளை மாற்றி அமைத்து நகரின் புறப்பகுதியில் கொடுங்கையூர், கோயம் பேடு, நேசப்பாக்கம், மற்றும் பெருங்குடி ஆகிய 4 இடங்களி லுள்ள புல் பண்ணைகளுக்கு தனி நீரேற்றுக் குழாய்கள் மூலம் திருப்பி விடுதல்,